**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் கந்தர்வக்கோட்டை.**
**மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு**
**ROC.No.814/2020/RG/F1, P.Dis. No.36/2021 Dated 07.04.2021**
**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 2/2024**
**வழக்கின் சுருக்கம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த காலம் | : | எதிரி கடந்த 17.05.2019ம் தேதியன்று காவலுக்குட்படுத்தப்பட்டு, இந்நீதிமன்றத்தில் கு.ப.ம.எண்.3043/2019ல் நாள் 29.07.2019ம் தேதியிட்ட உத்தரவின் படி பிணையில் சென்றுள்ளார். |
| 2. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 31.05.2019 |
| 3. | குற்றம் குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 04.06.2019 |
| 4. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : | இல்லை |
| 5. | அரசுத் தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள் | : | **முதல் விசாரணை** / **குறுக்கு விசாரணை**<br>அ.சா.1 – 12.07.2019 / இல்லை<br>அ.சா.2–20.03.2024 / 20.03.2024<br>அ.சா.3– 20.03.2024 / 20.03.2024<br>அ.சா.4– 10.06.2024 / 10.06.2024<br>அ.சா.5– 10.06.2024 / 10.06.2024<br>அ.சா.6– 30.09.2025 / 30.09.2025<br>அ.சா.7– 18.11.2025 / 18.11.2025<br>அ.சா.8– 26.12.2025 / 26.12.2025 |
| 6. | BNSS பிரிவு 351(1)ஆ இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 04.06.2026 |
| 7. | எதிரி தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டநாள் | | இல்லை |
| 8. | தலைமறைவு எதிரி பற்றிய விவரம் | : | இல்லை |
| 9. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் | : | இல்லை |

TNPD110000042024

| | | |
|---|---|---|
| | பிறப்பிக்கபட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | |

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.04 17:44:15 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் கந்தர்வகோட்டை.**
**முன்னிலை: திரு. N.சிவபழனி, B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கந்தர்வகோட்டை.
**2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 04ஆம் நாள் வியாழன் கிழமை**
திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீபராபவ வருடம் வைகாசி **21**ம் நாள்
**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 02/2024**
**(CNR.No. TNPD-1000004-2024)**

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சிசி.எண்.02/2024 |
| 2 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | ஆதனக்கோட்டை காவல் நிலையம்<br>குற்ற எண். 34/2019 |
| 3 | குற்றமுறையிடுபவர் | காவல் உதவி ஆய்வாளர்<br>ஆதனக்கோட்டை காவல் நிலையம் |
| 4 | எதிரியின் விபரம்<br>பெயர்<br>வயது<br>தந்தையின் பெயர்<br>குடியிருப்பு | 1. கார்த்தி (எ) செல்வக்கார்த்தி, வயது 32/2019<br>த/பெ.கல்யாணசுந்தரம்<br>புது அக்ரஹாரம், திருவையாறு,<br>தஞ்சாவூர் மாவட்டம்.<br><br>2. தமிழ்செல்வன், வயது 29/2019<br>த/பெ.அன்பழகன்,<br>எண். 103 D, சிவராமபுரம், திருவளங்காடு,<br>குத்தளம் தாலுகா,<br>நாகப்பட்டினம் மாவட்டம்.<br><br>3. ஆனந்தன், வயது 39/2019<br>த/பெ. குணசேகரன்,<br>பெரியார் தெரு, பெருகவளந்தான்,<br>மன்னார்குடி தாலுகா,<br>திருவாரூர் மாவட்டம்.<br>**தற்போது**<br>மெயின்ரோடு,<br>ஆவிக்கோட்டை, மதுக்கூர்,<br>பட்டுக்கோட்டை தாலுகா,<br>புதுக்கோட்டை மாவட்டம்.<br><br>(இவ்வழக்கில் மேற்படி மூன்று எதிரிகளுக்கு எதிராக புதுக்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1இல் குற்றயிறுதியறிக்கை |



Digitally signed by SIVAPALANI
SIVAPALANI Date: 2026.06.04 17:44:22 +0530

| | | |
|---|---|---|
| | | தாக்கல் செய்யப்பட்டு, பட்டியல் வழக்கு எண்.122/2019 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர், நிலஅதிகார வரம்பின் கீழ் இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, பட்டியல் வழக்கு எண். 215/2019 என மறு எண் கொடுக்கப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. 2வது எதிரி தமிழ்செல்வன் என்பவர் நீண்ட நாட்களாக நீதிமன்றத்தில் ஆஜராகாததால், அவருக்கு எதிராக பிணை விடா பிடியாணை பிறப்பிக்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்ததால் அவருக்கு எதிரான வழக்கு பட்டியல் வழக்கு எண்.02/2024 என தனியே பிரிக்கப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. 1 மற்றும் 3 எதிரிகளை பொறுத்து மேற்படி பட்டியல் வழக்கு எண்.215/2019-ல் 11.02.2026ம் தேதி இந்நீதிமன்றத்தால் விடுதலை செய்து தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது.) |
| 5 | <u>தேதி நாள்</u><br>சம்பவம் | 30.04.2019 |
| 6 | முறையீடு | 30.04.2019 |
| 7 | கைது | 17.05.2019 |
| 8 | பிணையில் விடுவித்தல் | எதிரி கடந்த 17.05.2019ம் தேதியன்று காவலுக்குட்படுத்தப்பட்டு, இந்நீதிமன்றத்தில் கு.ப.ம.எண்.3043/2019ல் நாள் 29.07.2019ம் தேதியிட்ட உத்தரவின் படி பிணையில் சென்றுள்ளார். |



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.04 17:44:38 +0530

| | | |
|---|---|---|
| 9 | விசாரணை துவக்கம் | 12.07.2019 |
| 10 | விசாரணை முடிவு | 26.12.2025 |
| 11 | தண்டனை அல்லது உத்தரவு | முடிவாக, எதிரி சட்டப்பிரிவுகள் 457(1), 380(1) இதசவின் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை கு.வி.மு.சபிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 12 | தீர்ப்புரை நகலை வழங்குவது அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் மீதான காண் முடிவு | -- |
| 13 | கால தாமததிற்கான விளக்கம் | அரசுத் தரப்பு சாட்சிகளை விசாரிக்க காலதாமதம். |

இவ்வழக்கு புதுக்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1இல் 31.05.2019ம் தேதியன்று ஆண்டு பட்டிகை வழக்கு எண்.122/2019 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, நில அதிகார வரம்பிற்கு கீழ் இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு ஆண்டு பட்டிகை வழக்கு எண்.215/2019 என மறு எண் கொடுக்கப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. 2வது எதிரி தமிழ்செல்வன் என்பவர் நீண்ட நாட்களாக நீதிமன்றத்தில் ஆஜராகாததால் அவருக்கு எதிரான வழக்கு ஆண்டு பட்டியல் வழக்கு எண்.02/2024 என தனியே பிரிக்கப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 04.06.2026ம் தேதி என் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக **உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–1** அவர்கள் முன்னிலையாகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.S.முருகேசன், B.Sc., B.L.** அவர்களும் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2026.06.04 17:44:42 +0530

## தீர்ப்புரை

**2. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

இவ்வழக்கின் பட்டியல் சாட்சி–1 மணிமாறன் என்பவருக்கு சொந்தமான புதுக்கோட்டை – தஞ்சாவூர் சாலை பெருங்களூர் குமரன் காம்ப்ளக்ஸில் உள்ள மணீஸ் மொபைல்ஸ் கடையை கடந்த 29.04.2019ம் தேதி பூட்டிவிட்டு சென்ற பிறகு மறுநாள் 30.04.2019ம் தேதி காலை 06.00 மணியளவில், தனது கடையின் பூட்டு உடைந்து கிடப்பதாக அருகில் வசிக்கும் காம்ப்ளக்ஸ் உரிமையாளர் தர்மராஜ் என்பவர் தகவல் சொன்னதன் பேரில், பட்டியல் சாட்சி–1 உடனே வந்து பார்த்தபோது, பட்டியல் சாட்சி–1இன் கடையின் ஷட்டர் திறந்த நிலையில் அதிலிருந்த பூட்டு உடைக்கப்பட்டு தனியாக கிடந்ததை பார்த்து கடையின் உள்ளே சென்று பார்த்தபோது, மர ரேக்கில் வைத்திருந்த MICRO MAX SMART PHONE–1, JIO PHONE–4, LAVA PHONE –1 ஆகியவற்றை எதிரிகள் ஒன்று சேர்ந்து திருடிச் சென்று குற்றம் புரிந்துள்ளனர். எனவே, எதிரிகள் மீது பிரிவுகள் 457, 380 இதசவின் கீழ் ஆதனக்கோட்டை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 207–ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.

**4. குற்றச்சாட்டு:–**

அரசுத்தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள முகாந்திரங்கள் எதிரி குற்றம் புரிந்திருப்பார் என கருதவும், கருத்தில் கொண்டு செயலாற்றவும் வழிவகுப்பனவாக தெரிந்தமையால், எதிரி மீது பிரிவுகள் 457(1), 380(1) இதசவின் கீழ் குற்றச்சாட்டு வனைந்து எதிரிக்கு படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்து தான்


SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.04 17:44:46 +0530

குற்றவாளி இல்லை என்று கூறினார். எனவே வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

5. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் 1 முதல் 8 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குச் சொத்து அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

6. வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 மணிமாறன் என்பவர் கடந்த30.04.2019ம் தேதி ஆதனக்கோட்டை காவல் உதவி ஆய்வாளர் அ.சா.7 கனகராஜ் என்பவரிடம் புகார் மனு கொடுத்துள்ளார். மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகார் மனுவை பெற்ற காவல் உதவி ஆய்வாளர் நிலைய குற்ற எண்.34/2019ல், சட்டப்பிரிவுகள் 457, 380 இதசவின் படி வழக்கு பதிவு செய்து அ.சா.ஆ.5 கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார்.

7. அ.சா.7 காவல் ஆய்வாளர் வழக்கின் கோப்பினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, கடந்த 30.04.2019ம் தேதி மாலை 06.15 மணியளவில் சம்பவயிடம் சென்று அ.சா.2 ரவிச்சந்திரன் மற்றும் அ.சா.3 சின்னையா (எ) செந்தில் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். வழக்கு சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சிகளாக அ.சா.4 முருகராஜ் மற்றும் அ.சா.5 தர்மராஜ் ஆகியோர் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

8. சாட்சிகளை விசாரணை செய்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என தெரிய வந்து எதிரிகளை தேடிவந்த நிலையில், 11.05.2019ம் தேதி திருவெறும்பூர் காவல் உதவி


SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.04 17:44:50 +0530

ஆய்வாளர் குமரேசபுரம் இரயில்வே கேட் அருகில், அதிகாலை 04.30 மணியளவில் ரோந்து பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, அந்த வழியாக வந்த சிவப்பு நிற டவேரா காரினை மறித்து நிறுத்தியதில், அதிலிருந்து நபர்கள் ஓட முற்பட்டதால், அவர்களை போலீஸ் பார்ட்டி சகிதம் பிடித்து விசாரித்தபோது, கார்த்திக் (எ) செல்வக்கார்த்தி, தமிழ்செல்வன், ஆனந்தன் என்று தெரிய வந்து தொடர்ந்து விசாரித்ததில் 1வது எதிரி கார்த்திக் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை அ.சா.6 செல்வகணேஷ், அ.சா.8 தியாகராஜன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார்.

9. 1வது எதிரி கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில், 1வது எதிரியை கடந்த 11.05.2019ம் தேதி காலை 09.30 மணியளவில் LIC பிரிவு ரோடு அருகில் உள்ள, V.V. கார் வொர்க் ஷாப்பிற்கு அழைத்துச் சென்று, அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரிலிருந்து, 1வது எதிரி எடுத்து அடையாளம் காட்டி ஆஜர் செய்த, இவ்வழக்கு சம்பந்தப்பட்ட Micro max cell phone –1, Jio cell phone 4, Lava cell phone–1 ஆகியவற்றை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றியுள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10. மேற்படி கைப்பற்றப்பட்ட செல்போன்கள் இவ்வழக்கு சம்பவத்துடன் தொடர்புடைய வழக்கு சொத்துக்கள் என்பதால், மேற்படி 3 எதிரிகள் இவ்வழக்கில் சம்மந்தப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளதாக திருவெறும்பூர் காவல் நிலைய ஆய்வாளரால் தகவல் சொன்னதன் அடிப்படையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து தகவல் சொன்னதன் பேரில், திருவெறும்பூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் ஒப்புதல்வாக்குமூலத்தின் உண்மை நகல், கைப்பற்றுதல் மகஜர் மற்றும் வழக்கு சொத்துக்களை ஒப்படைத்துள்ளார். எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்து வந்ததால், 17.05.2019ம் தேதி இவ்வழக்கின் எதிரிகள் கார்த்திக் (எ) செல்வக்கார்த்திக், தமிழ்செல்வன், ஆனந்தன் ஆகியோர்களை திருச்சி மத்திய சிறைச்சாலையில் வைத்து சம்பிரதாய கைது செய்து, PT வாரண்ட் மூலமாக இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளார். பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துக்களை படிவம் 91 மூலம் இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மேற்படி



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.04 17:44:56 +0530

படிவம் 91 அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.7 காவல் உதவி ஆய்வாளர் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 457, 380இன் கீழ் குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

11. இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

12. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து BNSS பிரிவு 351(1)(ஆ)–ன் படி வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய் சாட்சியம் என்றார். எதிரி தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை.

**13. விவாதம்:–**

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில், அரசுத்தரப்பு சாட்சிகள் மூலம் குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு தகுந்த தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இதனை மறுத்து இவ்வழக்கில் அரசுத்தரப்பில் எதிரி மீதான குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**14. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:–**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவெனில் எதிரி மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றமானது விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் எந்த விதமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.04 17:45:00 +0530

## தீர்வு

15. இருதரப்பும் கேட்கப்பட்டது. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

16. அரசுத் தரப்பில் அ.சா.1க்கு சொந்தமான பெருங்களூர் குமரன் காம்ப்ளக்ஸில் உள்ள மணீஸ் மொபைல்ஸ் கடையை கடந்த 29.04.2019ம் தேதி பூட்டிவிட்டு சென்ற பிறகு மறுநாள் 30.04.2019ம் தேதி காலை 06.00 மணியளவில், அ.சா.1இன் கடையின் பூட்டு உடைந்து கிடப்பதாக அருகில் வசிக்கும் காம்ப்ளக்ஸ் உரிமையாளர் அ.சா.5 தர்மராஜ் என்பவர் தகவல் சொன்னதாகவும், அ.சா.1 உடனே வந்து பார்த்தபோது, கடையின் ஷட்டர் திறந்த நிலையில் அதிலிருந்த பூட்டு உடைக்கப்பட்டு தனியாக கிடந்ததை பார்த்து கடையின் உள்ளே சென்று பார்த்தபோது, மர ரேக்கில் வைத்திருந்த MICRO MAX SMART PHONE-1, JIO PHONE-4, LAVA PHONE -1 ஆகியவற்றை எதிரிகள் ஒன்று சேர்ந்து திருடிச் சென்றதாக எதிரிகள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

17. வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 மணிமாறன் என்பவர் கடந்த30.04.2019ம் தேதி ஆதனக்கோட்டை காவல் உதவி ஆய்வாளர் அ.சா.7 கனகராஜ் என்பவரிடம் புகார் மனு கொடுத்துள்ளார். மேற்படி புகார் மனுவினை பரிசீலனை செய்ததில், கடந்த 29.04.2019ம் தேதி இரவு 08.00 மணியளவில், அ.சா.1க்கு சொந்தமான மணீஸ் மொபைல்ஸ் என்ற கடையை அடைத்துவிட்டு நெம்மேலிப்பட்டிக்கு சென்றுவிட்டதாகவும், மறுநாள் 30.04.2019ம் தேதி காலை 06.00 மணியளவில் தனது மாமா முருகராஜ் என்பவருக்கு காம்ப்ளக்ஸ் ஓனர் தர்மராஜ் போன் செய்து கடையின் ஷட்டர் மூடப்பட்டு அதிலிருந்த பூட்டு உடைக்கப்பட்டு தனியாக கிடந்ததாகவும், தான் கடைக்கு சென்று கடையின் உள்ளே சென்று பார்த்தபோது, மர ரேக்கில் வைத்திருந்த Micro max smart phone 2, Jio Phone 6, Lava Phone 6 ஆகியவை திருடு போய்விட்டதாகவும், மேற்படி பொருட்களை கண்டுபிடித்து தருமாறும் குறிப்பிட்டு புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.04 17:45:06 +0530

18. அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 29.04.19 அன்று வழக்கம் போல் இரவு 08.00மணிக்கு கடையை அடைத்து விட்டு வீட்டிற்கு சென்று விட்டேன் என்றும், மறுநாள் காலை 30.04.19 அன்று காலை 06.00 மணிக்கு தனது மாமா முருகராஜ்க்கு போன் வந்தது, காம்ப்ளக்ஸ் கடை ஒனர் பேசினார் என்றும், பூட்டு உடைந்து உள்ளதாக கூறினார் என்றும், தாங்கள் உடனே கிலம்பிச்சென்று பார்த்தோம் என்றும், கடையின் பூட்டு உடைந்து இருந்தது சட்டர் மூடியிருந்தது என்றும், திறந்து பார்த்தபோது போன் மற்றும் கல்லப்பட்டியில் உள்ள காசு எதுவுமில்லை என்றும், கடையிலிருந்த மைக்ரோ மேகஸ் ஸ்மார்ட் போன் 2, ஜியோ போன் 6, லாவாபோன்6 ஆகியவற்றை காணவில்லை அதன் மதிப்பு 20000 இருக்கும் என்றும், அதன் பின்னர் ஆதனக்கோட்டை காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றும்சாட்சியம் அளித்துள்ளார். புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

19. பார்வை மகஜர் சாட்சி அ.சா.2 தனது சாட்சியத்தில், 30.04.2019ம் தேதி மாலை 4 மணியளவில் பெருங்களூர் கடை விதியில் உள்ள குமரன் காம்ப்ளக்சில் செல்போன் கடையில் திருடுபோனது தொடர்பாக போலீசார் விசாரணை மேற்கொண்டு வரைபடம் வரைந்தார்கள் என்றும், அதற்கு சாட்சியாக தன்னிடம் கையொப்பம் கேட்டார்கள் என்றும், கையொப்பத்தினை செய்து கொடுத்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

20. மற்றொரு பார்வை மகஜர் சாட்சி அ.சா.3 தனது சாட்சியத்தில், பெருங்களூர் கடைவிதியில் உள்ள தனது கடைக்கு அருகே கடையில் திருடுபோனது சம்மந்தமாக SI கனகராஜ் அவர்கள் விசாரணை மேற்கொண்டார் என்றும், அதற்கு சாட்சியாக கையொப்பம் கேட்டார் என்றும், தான் கையொப்பம் செய்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

21. வழக்கு சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சி அ.சா.4 தனது சாட்சியத்தில், கடந்த 29.04.2019ம் தேதி இரவு கடையை பூட்டிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டார் என்றும், மறுநாள் காலை சுமார் 6 மணியளவில் காம்ப்ளக்சின் ஓனர் தனக்கு போன் செய்து மணிமாறன் கடையின் பூட்டு உடைக்கப்பட்டுள்ளது என்று கூறினார் என்றும், உடனே


SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.04 17:45:12 +0530

தாங்கள் கடைக்கு சென்று பார்த்தபோது கடையில் இருந்த மைக்ரோமேக்ஸ் ஸ்மார்ட் போன் –2 , ஜியோபோன் –6 , லாவா போன் –6 ஆகியவை காணாமல் போய் இருந்தது என்றும், அதன் மதிப்பு சுமார் 20 ஆயிரத்திற்கு மேல் இருக்கும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

22. மற்றொரு கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.5 தனது சாட்சியத்தில், 30.04.2019 ம் தேதி காலை சுமார் 7 –8 மணிக்குள் கடை திறப்பதற்காக தான் சென்றபோது மணிமாறன் வைத்திருந்த செல்போன் கடையின் பூட்டு உடைக்கப்பட்டு, பூட்டு தனியாக கிடந்தது என்றும், தான் மணிமாறன் மாமா முருகராஜ்க்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு தகவல் சொன்னேன் என்றும், அவர்கள் கடைக்கு வந்து பார்த்தபோது கடையில் இருந்த சில செல்போன்கள் காணாமல் போய்விட்டதாக சொன்னார்கள் என்றும், மணிமாறனால் புகார் கொடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

23. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைபற்றுதல் மகஜர் சாட்சியான அ.சா.6 தனது சாட்சியத்தில், கடந்த 11.05.2019 ஆம் தேதியன்று, தான் திருவெறும்பூர் தாலுகா, கிருஷ்ணசமுத்திரம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தேன் என்றும், அன்றைய தினம் காலை சுமார் 05.00 மணியளவில், திருவெறும்பூர் காவல்நிலைய ஆய்வாளர், தனக்கு போன் செய்து, கீழ குமரேசபுரம், இரயில்வே கேட் அருகில், வாகன சோதனையின் போது, சந்தேகத்திற்கிடமாக வந்த காரில் வந்த நபர்களை , பிடித்து வைத்திருப்பதாக கூறி, அங்கு வரச்சொன்னார்கள் என்றும், தான் சென்ற போது, அங்கு TN 18 J 1029 என்ற பதிவெண் கொண்ட சிவப்பு நிற டவேரா கார் அங்கு நின்று கொண்டிருந்தது என்றும், காவல் ஆய்வாளர் அங்கு 3 நபர்களை விசாரித்துக்கொண்டிருந்தார்கள் என்றும், அந்த நபர்களின் பெயர் செல்வகார்த்திக், ஆனந்தன், தமிழ்செல்வன் என்று சொன்னார்கள் என்றும், அப்போது, செல்வக்கார்த்திக் போலிசாரிடம் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தினை போலிசார் எழுதிக்கொண்டார்கள் என்றும், அதில் செல்வக்கார்த்திக் திருவையாறை சேர்ந்தவர் என்றும், சம்பவங்களை பற்றி சொன்னார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின்


SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.04 17:45:16 +0530

நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றும், அந்த இடத்தில், போலிசார் ரூ.500/– பணம், 3 கத்திகள், மேற்படி காரினை கைப்பற்றினார்கள் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில், செல்வக்கார்த்திக் பொருள்களை காண்பிப்பதாக சொன்னதன் பேரில், திருவெறும்பூரில் உள்ள LIC பில்டிங் அருகில் உள்ள VV கார் ஒர்க் ஷாப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குவாலிஷ் காரில் இருந்து, வெள்ளியிலான நான்கு கழுத்து செயின், 2 மோதிரம், 12 கைசெயின், 6 செல்போன்கள் ஆகிவற்றை செல்வக்கார்த்திக் எடுத்து ஆஜர் செய்தார் என்றும், அதனை போலிசார் கைப்பற்றினார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

24. மற்றொரு ஒப்புதல் வாக்குமூல மற்றும் கைபற்றுதல் மகஜர் சாட்சியான அ.சா.8 தனது சாட்சியத்தில், கடந்த 11.05.2019 ஆம் தேதி காலை சுமார் 5.30 மணியளவில் மேலகுமரேசபுரம் இரயில்வே கேட் அருகில் தான் வாக்கிங் சென்று கொண்டிருந்தேன் என்றும், அப்போது அங்கு காவல் ஆய்வாளர் மற்றும் கிருஷ்ணசமுத்திரம் கிராம நிர்வாக அலுவலர் அங்கு இருந்தார்கள் என்றும், தன்னை அழைத்து கையொப்பம் கேட்டார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

25. காவல் உதவி ஆய்வாளர் அ.சா.7 தனது சாட்சியத்தில்,கடந்த 30.04.2019 ஆம் தேதி மணிமாறன் என்பவர் நிலையம் ஆஜராகி ஆஜராகி, கொடுத்த புகார்மனுவை பெற்று, நிலைய குற்ற எண் 34/2019 இல் சட்டப்பிரிவுகள் 457, 380 IPC –ன் கீழ் வழக்கு பதிவு செய்து, கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்தேன் என்றும், தான் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 30.04.2019 ஆம் தேதி, மாலை 06.15 மணியளவில் சம்பவ இடம் சென்று, சாட்சிகள் ரவிச்சந்திரன் மற்றும் சின்னையா என்ற செந்தில் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து, சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பட்டியல் சாட்சிகள் மணிமாறன், முருகராஜ், தர்மராஜ் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், சாட்சிகளை விசாரித்து வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால், வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில், 11.05.2019 ஆம் தேதி, திருவெறும்பூர்



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.04 17:45:20 +0530

காவல் நிலைய குற்ற எண் 173/2019 வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகளை திரும்வெறும்பூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் தேடி வந்த நிலையில், அன்றைய தினம் குமரேசபுரம் இரயில்வே கேட் அருகில், அதிகாலை 04.30 மணியளவில், ரோந்து பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, அங்கு வழியாக வந்த சிவப்பு நிற டவேரா காரினை மறித்து நிறுத்திய போது, அதிலிருந்த நபர்கள் ஓட முற்பட்டதால் அவர்களை போலிஸ் பார்ட்டி சகிதம் பிடித்து, விசாரித்த போது, அந்த நபர்கள் கார்த்திக் என்ற செல்வகார்த்தி, தமிழ்செல்வன், ஆனந்தன் என தெரிய வந்ததாகவும், அந்த நபர்களை தொடர்ந்த விசாரித்ததில், 1ஆம் எதிரி கார்த்திக் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் செல்வகணேஷ் மற்றும் தியாகராஜன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார் என்றும், 1ஆம் எதிரியை 11.05.2019 ஆம் தேதி காலை 09.30 மணியளவில், LIC பிரிவு ரோடு அருகில் உள்ள, V.V கார் வொர்க் ஷாப்பிற்கு அழைத்து சென்று, அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரில் இருந்து, 1ஆம் எதிரி எடுத்து அடையாளம் காட்டி ஆஜர் செய்த, இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட Micro max cell phone 1, Jio cell phone 4, Lava cell phone 1 ஆகியவற்றை ஒரு கைப்பற்றுதல் மகஜர் மூலமாக சாட்சிகள் செல்வகணேஷ் மற்றும் தியாகராஜன் முன்னிலையில், கைப்பற்றியுள்ளார் என்றும், மேற்படி கைப்பற்றப்பட்ட செல்போன்கள் இவ்வழக்குடன் தொடர்புடைய வழக்கு சொத்துக்கள் என்பதாலும் மேற்படி 3 எதிரிகள் இவ்வழக்கில், சம்மந்தப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளதாக திருவெறும்பூர் காவல் நிலைய ஆய்வாளரால் தகவல் சொன்னதன் அடிப்படையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து எங்களுக்கு தகவல் சொன்னார்கள். அதன் அடிப்படையில், திருவெறும்பூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் மேற்படி ஒப்புதல்வாக்குமூலத்தின் உண்மை நகல், கைப்பற்றுதல் மகஜர் மற்றும் வழக்கு சொத்துக்களை எங்களிடம் ஒப்படைத்து மேற்படி 3 எதிரிகள் நீதிமன்றக் காவலில் இருந்து வருவதாக தெரிவித்தார் என்றும், கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், எதிரிகளை PT வாரண் மூலமாக நீதிமன்ற காவலுக்குட்படுத்தியதாகவும், 11.05.2019 ஆம் தேதி, ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் செல்வகணேஷ் மற்றும் தியாகராஜன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், இத்துடன் இந்த விசாரணையை முடித்து



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.04 17:45:25 +0530

வழக்கின் கோப்பினை பார்வையிட்டு எதிரிகளுக்கு எதிராக 17.05.2019ஆம் தேதி, சட்டப்பிரிவு 457, 380 IPC இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

26. அ.சா.1, அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோரின் சாட்சியத்திலிருந்து, அ.சா.1 தனக்கு சொந்தமான மணீஸ் மொபைல்ஸ் என்ற கடையின் கதவு உடைக்கப்பட்டிருந்ததாக தர்மராஜ் என்பவர் தகவல் சொன்னதன் பேரில், கடைக்கு வந்து பார்த்ததாகவும், அப்போது கடையின் கதவுகள் உடைக்கப்பட்டு தனியாக கிடந்ததை பார்த்து, கடையின் உள்ளே சென்று பார்த்தபோது, மர ரேக்கில் வைத்திருந்த Micro max smart phone 2, Jio Phone 6, Lava Phone 6 ஆகியவை திருடு போயிருந்ததை பார்த்து மேற்படி சம்பவம் தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார் என்பது தெரிய வருகிறது. அ.சா.1இன் மாமாவான அ.சா.4, அ.சா.1 உடன் கடைக்கு சென்று பார்த்ததாக சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.1இன் கடை உள்ள காம்ப்ளக்சின் ஓனர் அ.சா.5 தர்மராஜ் என்பவர் அவரது கடையை திறப்பதற்காக சென்றபோது, அ.சா.1இன் கடையின் பூட்டு உடைக்கப்பட்டு, பூட்டு தனியாக கிடந்ததாக சாட்சியம் அளித்துள்ளார்கள். எனவே, வழக்கு சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள் யார் என்பது குறித்து அ.சா.1, அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோருக்கு நேரடியாக தெரியாது என்பது தெரிய வருகிறது.

27. இவ்வழக்கில் எதிரிகள், 1வது எதிரி கார்த்தி (எ) செல்வக்கார்த்தி என்பவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் மூலமாக இவ்வழக்கு சம்பவத்துடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளார்கள். அரசுத் தரப்பில், 11.05.2019ம் தேதி திருவெறும்பூர் காவல் உதவி ஆய்வாளர் குமரேசபுரம் இரயில்வே கேட் அருகில், அதிகாலை 04.30 மணியளவில் ரோந்து பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததாகவும், அப்போது அந்த வழியாக வந்த சிவப்பு நிற டவேரா காரினை மறித்து நிறுத்தியபோது, அதிலிருந்து நபர்கள் ஓட முற்பட்டதாகவும், அவர்களை பிடித்து விசாரித்தபோது, கார்த்திக் (எ) செல்வக்கார்த்தி, தமிழ்செல்வன், ஆனந்தன் என்று தெரிய வந்து தொடர்ந்து விசாரித்ததில், 1வது எதிரி கார்த்திக் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை அ.சா.6 செல்வகணேஷ், அ.சா.8 தியாகராஜன் ஆகியோர் முன்னிலையில் பதிவு



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.04 17:45:29 +0530

செய்துள்ளதாகவும், 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், 1வது எதிரியை கடந்த 11.05.2019ம் தேதி காலை 09.30 மணியளவில் LIC பிரிவு ரோடு அருகில் உள்ள, V.V. கார் வொர்க் ஷாப்பிற்கு அழைத்துச் சென்று, அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரிலிருந்து, 1வது எதிரி எடுத்து அடையாளம் காட்டி ஆஜர் செய்த,இவ்வழக்கு சம்பந்தப்பட்ட Micro max cell phone –1, Jio cell phone 4, Lava cell phone1 ஆகியவற்றை அ.சா.6 செல்வகணேஷ், அ.சா.8 தியாகராஜன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலமாக கைப்பற்றப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

28. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியான அ.சா.8 தியாகராஜன் தனது சாட்சியத்தில், வழக்கு சம்பவம் குறித்து சாட்சியம் அளிக்கவில்லை. மாறாக அ.சா.8 தனது சாட்சியத்தில், கடந்த 11.05.2019 ஆம் தேதி காலை சுமார் 5.30 மணியளவில் மேலகுமரேசபுரம் இரயில்வே கேட் அருகில் தான் வாக்கிங் சென்று கொண்டிருந்ததாகவும், அப்போது அங்கு காவல் ஆய்வாளர் மற்றும் கிருஷ்ணசமுத்திரம் கிராம நிர்வாக அலுவலர் அங்கு இருந்தார்கள் என்றும், தன்னை அழைத்து கையொப்பம் கேட்டார்கள் என்றும், வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அ.சா.8இன் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக அமைந்துள்ளது.

29. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியான அ.சா.6 செல்வகணேஷ் தனது சாட்சியத்தில், கடந்த 11.05.2019 ஆம் தேதியன்று, தான் திருவெறும்பூர் தாலுகா, கிருஷ்ணசமுத்திரம் கிராத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தேன் என்றும், அன்றைய தினம் காலை சுமார் 05.00 மணியளவில், திருவெறும்பூர் காவல்நிலைய ஆய்வாளர், தனக்கு போன் செய்து, கீழ குமரேசபுரம், இரயில்வே கேட் அருகில், வாகன சோதனையின் போது, சந்தேகத்திற்கிடமாக காரில் வந்த நபர்களை பிடித்து வைத்திருப்பதாக கூறி, அங்கு வரச்சொன்னார்கள் என்றும், தான் சென்ற போது, அங்கு TN 18 J 1029 என்ற பதிவெண் கொண்ட சிவப்பு நிற டவேரா


SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.04 17:45:34 +0530

கார் அங்கு நின்று கொண்டிருந்தது என்றும், காவல் ஆய்வாளர் அங்கு 3 நபர்களை விசாரித்துக் கொண்டிருந்தார்கள் என்றும், அந்த நபர்களின் பெயர் செல்வகார்த்திக், ஆனந்தன், தமிழ்செல்வன் என்று சொன்னார்கள் என்றும், அப்போது, 1வது எதிரி செல்வக்கார்த்திக் போலிசாரிடம் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தினை போலிசார் எழுதிக்கொண்டார்கள் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், திருவெறும்பூரில் உள்ள LIC பில்டிங் அருகில் உள்ள VV கார் வொர்க் ஷாப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குவாலிஸ் காரிலிருந்து வெள்ளியிலான 4 கழுத்து செயின், 2 மோதிரம், 12 கை செயின், 6 செல்போன்கள் ஆகியவற்றை செல்வக்கார்த்திக் எடுத்து ஆஜர் செய்ததை போலிசார் கைப்பற்றினார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

30. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், அரசு தரப்பில் 11.05.2019ம் தேதி அதிகாலை 05.00 மணியளவில், 1வது எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாகவும், அதன் அடிப்படையில் அன்றைய தினம் காலை 09.30 மணியளவில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் தட்டச்சு செய்யப்பட்ட ஆவணங்களாக உள்ளதால் அரசு தரப்பு வழக்கில் பலத்த சந்தேகம் எழுவதாக தெரிவித்தார். 1வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அ.சா.ஆ.4 கைப்பற்றுதல் மகஜர் கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட ஆவணங்களாக அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அ.சா.6 தனது சாட்சியத்தில் போலிசார் 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எழுதிக் கொண்டதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், அ.சா.6 தனது குறுக்கு விசாரணையில், போலிசார் தட்டச்சு செய்து கொடுத்த ஆவணங்களில் கையொப்பம் செய்ததாக தனது முதல் விசாரணை சாட்சியத்திற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார். 1வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் தலைமைக் காவலர் சதீஸ்குமார் என்பவர் ஒப்புதல் வாக்குமூலத்தை மடிக்கணினியில் தட்டச்சு செய்ததாக குறிப்பு தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி தலைமை



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.04 17:45:38 +0530

காவலர் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்பட்டு விசாரிக்கப்படவில்லை. அ.சா.ஆ.4 கைப்பற்றுதல் மகஜரில் அவ்வாறான குறிப்புகள் ஏதும் இல்லை.

31. மேலும், திருவெறும்பூர் காவல் நிலைய குற்ற எண்கள்.169/2019, 170/2019 மற்றும் 173/2019 ஆகிய வழக்குகளில் சம்மந்தப்பட்ட எதிரிகளை திருவெறும்பூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் கைது செய்து விசாரித்தபோது, அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் புதுக்கோட்டை பெருங்களூர் கடை வீதியில் பூட்டியிருந்த ஜுவல்லரி கடையின் பூட்டை உடைத்து திருடியதாக கூறியதன் அடிப்படையில் வழக்கு சொத்துக்கள் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக அரசு தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, எதிரிகளை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டபோது, அந்த வழக்குச் சொத்துக்கள் எந்த காவல் நிலையத்தில், எந்த குற்ற எண் சம்மந்தப்பட்ட வழக்கில் தொடர்புடையது என்பது திருவெறும்பூர் காவல் நிலைய காவல் ஆய்வாளருக்கு தெரிந்திருப்பதற்கு வாய்ப்பில்லை. 11.05.2019ம் தேதி அதிகாலை 05.00 மணியளவில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு அ.சா.ஆ.4 கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்பட்டதாக கூறப்பட்டுள்ள நிலையில், அ.சா.ஆ.4 கைப்பற்றுதல் மகஜரில் வழக்குச் சொத்துக்கள் ஆதனக்கோட்டை காவல் நிலைய குற்ற எண்.34/2019 சட்ட பிரிவு 457, 380 இதச வழக்கின் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வழக்குச் சொத்துக்கள் மேற்படி ஆதனக்கோட்டை காவல் நிலைய குற்ற எண் சம்மந்தப்பட்ட வழக்கில் தொடர்புடையது என்பது குறித்து அ.சா.ஆ.4 கைப்பற்றுதல் தயார் செய்யப்பட்டபோதே திருவெறும்பூர் காவல் ஆய்வாளருக்கு எவ்வாறு தெரியவந்தது என்பது குறித்து அரசு தரப்பில் எவ்வித உரிய விளக்கங்களும் அளிக்கப்படவில்லை. மேலும், எதிரிகள் 1வது எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் மூலமாக இவ்வழக்கு சம்பவத்துடன் தொடர்புப்படுத்தப்பட்டுள்ள நிலையில், 1வது எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று வழக்குச் சொத்துக்களை கைப்பற்றியதாக கூறப்படும் திருவெறும்பூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்பட்டு விசாரிக்கப்படவில்லை.



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.04 17:45:42 +0530

எனவே, மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அ.சா.ஆ.4 கைப்பற்றுதல் மகஜர் பலத்த சந்தேகத்திற்குரிய ஆவணங்களாக அமைந்துள்ளது.

32. எனவே, 1வது எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் அடிப்படையில், இவ்வழக்கின் மற்ற எதிரிகள் இவ்வழக்கு சம்பவத்துடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ள நிலையில், ஒப்புதல் வாக்குமூலம் சாட்சியான அ.சா.8 அரசு தரப்பு வழக்கிற்கும், அ.சா.6இன் சாட்சியத்திற்கும் முரணாக சாட்சியம் அளித்துள்ளதாலும், குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவை சந்தேகத்திற்குரியதாக அமைந்துள்ளதாலும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்த திருவெறும்பூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்பட்டு விசாரிக்கப்படாத நிலையில், அ.சா.7 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தினை மட்டும் வைத்து எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாக முடிவு செய்ய இயலாது. எனவே, அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**33. முடிவாக, எதிரி சட்டப்பிரிவுகள் 457(1), 380(1) இதசவின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, எதிரியை கு.வி.மு.சபிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

34. எதிரி எழுதிக்கொடுத்துள்ள பிணை பத்திரங்கள் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

35. இவ்வழக்கில் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்ற வழக்கு சொத்து எண்.155/2021இல் கண்ட 1) Micro max cell phone –1, 2) Jio cell phone –4, 3) Lava cell phone–1 ஆகியவற்றை புதுக்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1இல் 30.05.2019ம் தேதிCr.M.P.No.2444/2019இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி அதன் உரிமையாளர் மணிமாறன் என்பவரிடம் இடைக்கால உடைமையாக

ஒப்படைக்கப்பட்டுள்ளது. வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு மேற்படி வழக்குச் சொத்தினை அவர் நிரந்தர உடைமையாக வைத்துக் கொள்ள உத்தரவிடப்படுகிறது. அவர் எழுதிக் கொடுத்துள்ள பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 04.06.2026ம் தேதியில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.04 17:45:50 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை**

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள்:-</u>**

| அரசு தரப்பு சாட்சிகளின் வரிசை | சாட்சிகளின் பெயர் | சாட்சிகளின் விபரம் |
|---|---|---|
| அ.சா.1 | திரு. மணிமாறன் | புகார்தாரர் |
| அ.சா.2 | திரு. ரவிச்சந்திரன் | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.3 | திரு. சின்னையா (எ) செந்தில் | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.4 | திரு.முருகராஜ் | கேள்விப்பட்ட சாட்சி |
| அ.சா.5 | திரு.தர்மராஜ் | கேள்விப்பட்ட சாட்சி |
| அ.சா.6 | திரு. செல்வகணேஷ் | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| அ.சா.7 | திரு.கனகராஜ் | புலன் விசாரணை அதிகாரி |
| அ.சா.8 | திரு.தியாகராஜன் | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:-**

| சான்று ஆவணங்களின் வரிசை | தேதி | சான்றாவணங்களின் விபரம் | யாரால் நிரூபிக்கப்பட்டுள்ளது |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 12.07.2019 | புகார் மனு | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 20.03.2024 | பார்வை மகஜர் | அ.சா.2 |
| அ.சா.ஆ.3 | 30.09.2025 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.6இன் சாட்சி கையொப்பம் | அ.சா.6 |
| அ.சா.ஆ.4 | 30.09.2025 | கைப்பற்றுதல் மகசர் | அ.சா.6 |
| அ.சா.ஆ.5 | 18.11.2025 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.7 |
| அ.சா.ஆ.6 | 18.11.2025 | மாதிரி வரைபடம் | அ.சா.7 |
| அ.சா.ஆ.7 | 18.11.2025 | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.7 |
| அ.சா.ஆ.8 | 18.11.2025 | படிவம் 91 | அ.சா.7 |
| அ.சா.ஆ.9 | 26.12.2025 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.8இன் சாட்சி கையொப்பம் | அ.சா.8 |
| அ.சா.ஆ.10 | 26.12.2025 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.8இன் சாட்சி கையொப்பம் | அ.சா.8 |

**அரசு தரப்பு சான்றுப் பொருட்கள் :-** உண்டு

| | | |
|---|---|---|
| சா.பொ.1 | RP.No155/2019 | 1) Micro max cell phone -1,<br>2) Jio cell phone -4,<br>3) Lava cell phone-1 |

**எதிரி தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்;** இல்லை

<u>குறிப்பு;</u>

1. எதிரி கடந்த 17.05.2019ம் தேதியன்று காவலுக்குட்படுத்தப்பட்டு, இந்நீதிமன்றத்தில் கு.ப.ம.எண்.3043/2019ல் நாள் 29.07.2019ம் தேதியிட்ட உத்தரவின் படி பிணையில் சென்றுள்ளார்.

2. சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. இவ்வழக்கின் தீர்ப்பு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் உண்டு

5. வழக்கின் தீர்ப்பு நகல் மாண்பமை தலைமை நீதித்துறை நடுவர் புதுக்கோட்டை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.04 17:45:56 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**